<u>**கூடுதல் சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்**</u>

நாள் 26.02.2026

அசல் வழக்கு எண். 168/2021

வா.சா. 1 – பிரேமாவதி, க/பெ. குப்பன்

சாட்சி சத்யபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

<u>**குறுக்கு விசாரணை**</u>

நீங்கள் என்ன வேலை செய்கிறீர்கள் என்றால் ஏற்றுமதி நிறுவனத்தில் பணியாற்றி வந்தேன். தற்பொழுது வேலைக்கு செல்கிறீர்களா என்றால் தற்போது வேலைக்கு செல்ல இயலவில்லை. பிள்ளைகளுக்கு திருமணம் செய்து விட்டீர்களா என்றால் இரண்டு பிள்ளைகளுக்கு திருமணம் ஆகி விட்டது. எந்த ஆண்டு திருமணம் செய்தீர்கள் என்றால் அது தெரியவில்லை. தோராயமாக எவ்வளவு ஆண்டுகள் இருக்கும் என்றால் சின்ன பையனுக்கு திருமணம் செய்து 7 ஆண்டுகள் ஆகிறது பெரியவனுக்கு அதற்கு முன்பாக திருமணம் நடந்து விட்டது. ஏற்றுமதி நிறுவனத்தில் நீங்கள் பணியாற்றியதாக சொல்கிறீர்கள் அப்பொழுது உங்களுக்கு எவ்வளவு சம்பளம் என்றால் மாதம் ரூபாய் 2500 ஆகும். எந்த ஆண்டு வேலையில் இருந்து நின்று விட்டீர்கள் என்றால் வருடம் தெரியவில்லை. தோராயமாக ஆறு ஆண்டுகள் ஆகிறது. உங்கள் கணவர் என்ன வேலை செய்து கொண்டிருந்தார் என்றால் அவர் ரேஷன் கடையில் வேலை செய்து வந்தார். ரேஷன் கடையில் அரசு பணியில் இருந்தாரா என்றால் இல்லை உதவியாளராக இருந்தார். அவருக்கு எவ்வளவு சம்பளம் என்றால் அவர்தான் வைத்திருப்பார் என்னிடம் காட்ட மாட்டார். வட்டி தொழில் செய்கிறீர்களா என்றால் இல்லை. உங்கள் கணவர் இதே நீதிமன்றத்தில் முதல் பிரதிவாதிக்கு எதிராக அசல் வழக்கு எண் 232/2021 என்கிற வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால்

சரிதான். அந்த வழக்கும் பண வசூலுக்காக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு என்றால் சரிதான். உங்கள் கணவர் எவ்வளவு பணத்திற்காக வழக்கு தாக்கல் செய்தார் தெரியுமா என்றால் ரூ.3,50,000/- வேண்டும் என்று தாக்கல் செய்துள்ளார். பண வசூலுக்காக வழக்கு தாக்கல் செய்துள்ளார். இந்த வழக்கு எவ்வளவு தொகைக்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் ரூ.3,50,000/- வேண்டும் என்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது. நீங்களும் உங்கள் கணவரும் ஒரே தேதியில் பிரதிவாதிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு கொடுத்தீர்கள் என்றால் சரிதான். நீங்கள் பிரதிவாதிக்கு பணம் கொடுத்ததாக சொல்கிறீர்கள் எந்த தேதியில் எங்கு வைத்து பணம் கொடுத்தீர்கள் என்றால் 22 ஆம் தேதி கொடுத்தோம் மாதம், வருடம் ஞாபகம் இல்லை. வீட்டில் வைத்து பணம் கொடுத்தோம் என்னுடைய வீட்டில் வைத்து தான் பணம் கொடுத்தோம். பணம் கொடுப்பதற்கு முன்பாக எவ்வளவு நாளைக்கு முன்பாக வந்து பணம் கேட்டார்கள் என்றால் அப்பப்போ வந்து கேட்டுக் கொண்டுதான் இருப்பார்கள் எத்தனை முறை பணம் கேட்டார்கள் என்றால் சுமார் ஆறு அல்லது ஏழு முறை பணம் கேட்டு இருப்பார்கள். எவ்வளவு பணம் வேண்டும் என்று கேட்டார்கள் என்றால் முதலில் ரூபாய் 2லட்சம் வாங்கினார்கள் பிறகு ரூபாய் 50,000/- வாங்கினார்கள் பையன் கல்யாணம் என்று கூறி ரூபாய் 1லட்சம் பணம் கேட்டார்கள்அவ்வளவுதான். எந்த தேதியில் மூன்று தவணையாக பணம் கொடுத்தீர்கள் என்றால் நான் அவ்வளவாக படிக்கவில்லை எனக்கு தேதி ஞாபகம் வில்லை. மூன்று தவணைக்கும் இடையில் கால இடைவெளி என்ன என்றால் மதியம் 12 மணிக்கு கொடுத்தோம். ஆவணம் பணம் கொடுத்த பிறகு முன்போ அல்லது பின்போ எவ்வளவு காலத்திற்குப் பிறகு

எழுதப்பட்டது என்றால் இர்ப்பான் என்கிற பையன் எழுதிக் கொண்டு வந்து கொடுத்தான். மீண்டும் சாட்சி மாற்றி எழுதிக் கொண்டு வந்து தரவில்லை என்று கூறுகிறார் பதிவு செய்யப்பட்டது. எழுதிக் கொடுக்கவில்லை டைப் செய்து கொடுத்ததாக கூறுகிறார். பணம் கொடுத்தவுடன் எவ்வளவு காலம் கழித்து கொடுத்தார்கள் என்றால் பணம் கொடுத்தவுடன் டைப் செய்து ரிஸ்வான் என்பவர் கொண்டு வந்து கொடுத்தார். எழுதிக் கொடுத்ததாகவும் டைப் செய்து கொடுத்ததாகவும் நீங்கள் சொல்கிறீர்கள் அது எங்கு வைத்து எழுதப்பட்டது டைப் செய்தது என்று உங்களுக்கு தெரியாது என்றால் நம்மூர் தாலுகா ஆபீசில் எழுதி கொடுத்தார்கள் டைப் செய்து கொடுத்தார்கள். தாலுக்கா அலுவலகத்திற்கு நீங்கள் சென்றீர்களா என்றால் செல்லவில்லை. ஆவணத்தில் உள்ள அனைத்தும் டைப் செய்து தாலுகா அலுவலகத்தில் இருந்து தான் உங்களிடம் கொடுத்தார்களா என்றால் சரிதான். கையெழுத்து உட்பட தாலுக்கா அலுவலகத்தில் எழுதப்பட்டதா என்றால் கையொப்பம் வீட்டில் போட்டுக் கொடுத்தார்கள். பணம் எத்தனை மணிக்கு கொடுத்தீர்கள் ஆவணம் எப்பொழுது எழுதினீர்கள் என்றால் பணம் 12 மணிக்கு கொடுத்தோம் ஆவணம் 1மணிக்கு எழுதிக் கொடுத்தார்கள். ஆவணம் யார் தயார் செய்தது என்று இருக்கிறதா என்றால் ரிஸ்வான் தான் தயார் செய்தார் அந்த விவரம் ஆவணத்தில் இருக்கிறதா என்றால் ரிஸ்வான் என்பவர் தான் எனக்கு எழுதி கொடுத்தார் . மூன்று தவணையாக பணம் கொடுத்ததாக சொல்கிறீர்கள் அது ரொக்கமாக இருந்து கொடுத்தீர்களா வங்கியில் இருந்து கொடுத்தீர்களா என்றால் ரொக்கமாக இருந்து தான் பணம் கையில் இருந்து தான் கொடுத்தேன். நீங்கள் ஏற்றுமதி

நிறுவனத்தில் பணி புரிவதாகவும் உங்கள் கணவர் தினக்கூலி சென்றதாகவும் சொல்கிறீர்கள் இவ்வளவு பெரிய தொகை உங்களுக்கு எவ்வாறு கிடைத்தது என்றால் என் அம்மா வீட்டில் அந்த நேரத்தில் ரூபாய் மூன்று லட்சம் கொடுத்தார்கள். கடன் கொடுப்பதற்கு முன்பாக அம்மா வீட்டில் எப்போது பணம் கொடுத்தார்கள் என்றால் கொஞ்ச நாளைக்கு முன்பாக கொடுத்தார்கள் கணக்கில் வைத்திருந்தேன். அது எவ்வளவு நாளுக்கு முன்பாக வங்கியில் இருந்து எடுத்தீர்கள் என்றால் ஞாபகம் இல்லை. வங்கியில் இருந்து பணம் எடுத்ததற்கான ஆவணம் ஏதேனும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தீர்களா என்றால் தாக்கல் செய்யவில்லை. இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக பணம் கொடுக்கல் வாங்கல் ஏதேனும் இருந்ததா என்றால் அப்பொழுது எதுவும் இல்லை. அவ்வாறு முன்பின் கடன் கொடுக்கும் வழக்கம் இல்லாத நிலையில் திடீரென்று எவ்வாறு எந்த நம்பிக்கையின் அடிப்படையில் கொடுத்தீர்கள் என்றால் எங்கள் தெருவை சார்ந்தவர் என்பதால் கொடுத்தோம். எந்த வகையில் டினாமினேஷனில் பணம் கொடுத்தீர்கள் என்றால் ரூபாய் 500 ரூபாயாக தான் கொடுத்தேன். சாட்சி கையெழுத்து யார் போட்டது என்றால் என்னுடைய சின்ன மகன் கணேஷ் என்பவர் சாட்சி போட்டு உள்ளார். மற்றொருவர் செல்வி என்பவர் சாட்சி போட்டுள்ளார். பணம் கொடுப்பதற்கு முன்பாக கையொப்பம் வாங்கினீர்களா அல்லது பின்பாக கையொப்பம் வாங்கினீர்களா என்றால் முன்பாக கையொப்பம் வாங்கினேன். மூன்று தவணையாக பணம் கொடுத்ததாக சொல்கிறீர்கள் பத்திரத்தில் எப்பொழுது கையொப்பம் வாங்கினீர்கள் என்றால் கார் எடுக்கப் போவதாக சொல்லும்பொழுது பணம் கொடுத்து கையொப்பம் வாங்கினேன். எந்த

தவணைத் தொகை கொடுக்கும் பொழுது கார் எடுக்க பணம் கொடுத்தீர்கள் என்றால் அவர்கள் ஒரு பழைய கார் வைத்திருந்தார்கள். கார் வேஸ்ட் ஆக போகிவிட்டது பணம் கொடுத்து விடுவேன் என்று கேட்டார்கள். எந்த தவணை பணம் கொடுக்கும் பொழுது கையொப்பம் போட்டு கொடுத்தார்கள் என்றால் மூன்றாவது தவணை பணம் வாங்கும் போது கையொப்பம் போட்டுக் கொடுத்தார்கள். மூன்றாவது தவணை எவ்வளவு பணம் கொடுத்தீர்கள் என்றால் ரூபாய் ஒன்றரை லட்சம் கொடுத்தோம். பிரதிவாதி கையொப்பம் போடும்போது சாட்சிகள் அங்கு இருந்தார்களா என்றால் என்னுடைய பையன் இருந்தான். செல்வி என்பவர் புற்றுநோயால் இறந்து விட்டார். கையொப்பம் போடும்போது சாட்சிகள் இருந்தார்களா என்றால் இருந்தார்கள். பிரதிவாதிகள் உங்களிடமும் உங்கள் கணவரிடமும் ரூபாய் 70,000/- கடன் வாங்கி இருந்தார் நீங்கள் அதிகப்படியாக வட்டி கேட்டு தொந்தரவு செய்ததால் பிரதிவாதி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களிடம் புகார் கொடுத்தார்கள் என்றால் அது பொய் புகார் ஆகும் போலீஸ் அது குறித்து எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை அது பொய் புகார் தான். 2014 ஆம் ஆண்டு கடை வைக்கும் போது கந்து வட்டிக்காக பணம் கொடுத்தீர்கள் அந்த பணம் ரூபாய் 70,000/- ஆகும் அதற்காகத்தான் புகார் கொடுத்தார்கள் என்றால் சரியில்லை. பிரதிவாதி கொடுத்த புகாரிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காக இந்த வழக்கு தாக்கல் செய்து உள்ளீர்கள் என்றால் சரியில்லை. ஆவணம் பொய்யாக தயார் செய்தீர்கள் என்றால் சரியில்லை. ஆவணத்தில் உள்ள கையொப்பம் பிரதிவாதியின் கையொப்பம் இல்லை என்று சொன்னால் சரியில்லை. நீங்கள் பிரதிவாதிக்கு எதிராக பொய்யான வழக்கு தாக்கல் செய்துள்ளீர்கள் ஆகவே

**அதை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று சொன்னால் சரியில்லை பிரதிவாதிகளும் இருந்து பணம் பறிக்க இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரியில்லை.**

Type written by the Typist in Open Court to my Dictation and to my hearing read over and typo graphed to the witness and acknowledged by him / her to be correct.

Sd/- T.Thirumal,
Additional Subordinate Judge,
Kancheepuram